## செயற்பொறியாளர் பொ.ப.து., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சேப்பாக்கம், சென்னை–5

முன்னிலை : பொறி.சி.கல்யாண சுந்தரம், எம்.இ.எம்.ஐ.இ.,
செயற்பொறியாளர், பொ.ப.து.,

<u>செயல்முறை ஆணை எண்.அ1/78/2018/ நாள். 08.11.2018</u>

அய்யா,

பொருள்: பணியமைப்பு – த.நா.அ.ப.தொகுதி – செல்வி.K.நாகேஸ்வரி, இளநிலை உதவியாளர், கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம், மதுரை – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் – தகுதிகாண் பருவம் துவக்கி ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. த.நா.அரசு பணியாளர் தேர்வாணைய கடித எண்.5428/PSDH-2/2017, நாள்.26.09.2017.
2. முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டல மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5 அவர்களின் செயல்முறை எண்.எஸ்.3(3)/34252/2017–1, நாள். 12.10.2017.
3. கண்காணிப்புப் பொறியாளர் பொ.ப.து, திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ1/552/2017, நாள்.23.10.2017.
4. செயற்பொறியாளர் பொ.ப.து., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ1/கோ–6/2017, நாள்.23.10.2017.
5. உதவி செயற்பொறியாளர், பொ.ப.து., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம், மதுரை அவர்களின் செயல்முறை ஆணை எண்.கோ.1/2017/உ.செ.பொ/மதுரை, நாள்.25.10.2017.

****

பார்வையில் காணும் செயல்முறை ஆணைகளின் படி செல்வி.K.நாகேஸ்வரி, இளநிலை உதவியாளராக, இக்கோட்ட அலுவலகத்தின் கீழ் இயங்கும் உதவி செயற்பொறியாளர், பொ.ப.து., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம், மதுரை அலுவலகத்தில் 25.10.2017 முற்பகல் பணியேற்றார்.

பார்வை 1–ல் காணும் தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலரின் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி IV–ல் அடங்கிய 2015–2016ஆம் ஆண்டுகளுக்கு நடத்தப்பட்ட போட்டித் தேர்வில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2–ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் (மற்றும்) தலைமைப் பொறியாளர் (பொது) , பொ.ப.து., சென்னை அவர்களால் மதுரை மண்டல அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட செல்வி.K.நாகேஸ்வரி, இளநிலை உதவியாளர், பார்வை–3ல் காணும் கண்காணிப்புப் பொறியாளர்

பொ.ப.து, திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் மூலம் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு 25.10.2017 மு.ப. முதல் பணியில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்.

இவரது பணி தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதியின் இளநிலை உதவியாளர் பதவியில் 25.10.2017 மு.ப. முதல் தமிழ்நாடு அரசு சார்நிலை பணிகளுக்கான பொது விதிகளில் விதி எண்.23ஏ (1)–ன்படி அன்னார் பணியேற்ற நாளான 25.10.2017 மு.ப. முதல் பணிவரன்முறை செய்தும் ஆணை வழங்கப்படுகிறது.

மேற்படி பணிவரன்முறை நாள் முதல் இவரது தகுதிகாண் பருவ காலம் தொடங்கி மூன்றாண்டு தொடர் பணியின் இரண்டாண்டு பணிக்காலத்தில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகரில் நடைபெறும் தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் என இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், இப்பணிவரன்முறை ஆணை சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நிலுவையிலுள்ள வழக்கின் தீர்ப்பிற்கு உட்பட்டது என்கிற நிபந்தனையுடன் இப்பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

செயற்பொறியாளர், பொ.ப.து.,
கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம்,
சேப்பாக்கம், சென்னை–5.

பெறுநர்
செல்வி.K.நாகேஸ்வரி,
இளநிலை உதவியாளர்,
உதவி செயற்பொறியாளர் அலுவலகம், பொ.ப.து.,
கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம்,
மதுரை.

நகல்:
1. சிறப்பு தலைமைப் பொறியாளர், பொ.ப.து., திட்டம் மற்றும் வ டிவமைப்பு வட்டம் (கட்டடம்), சேப்பாக்கம், சென்னை–5.
2. உதவி செயற்பொறியாளர் அலுவலகம், பொ.ப.து., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு உபகோட்டம், மதுரை.
3. பணிப்புத்தகம்.
4. இருப்பு கோப்பு.